# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| MCOP.No. 77/2024 | Date : 27.03.2026 | PW 1 |
|---|---|---|
| Name: மாரியப்பன் | த/பெ. ஆனந்தன் | |

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது வயது, வருமானம், தொழில் ஆகியவற்றை காட்ட ஆதரவு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. விபத்தானது28.04.2022 அன்று நடந்தது என்றால் சரிதான். மனுவானது 27.09.2024யில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த மனுவாகனது காலதோஷத்தால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு நானும் காரணம் என்பதால் எனது அஜாக்ரதையையும் நஷ்டஈட்டில் கணக்கில் கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல. மருத்துவ பில்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீட்டு தொகை அதிகம் என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்தியதாக கூறும் TN 52 V 861 என்ற டாடாஏஸ் வாகனத்தின் ஓட்டுநருக்கு விபத்து காலத்தில் தகுந்த செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லாததால் வாகன உரிமையாளர் 1ம் எதிர்மனுதாரர் பாலிஸி விதிகளை மீறியுள்ளார் என்றும் அதனால் 3ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. மேலும் இந்த வாகனத்திற்கு பதிவு சான்றிதழ் காலாவதியாகிவிட்டதால் வாகன உரிமையாளர் 1ம் எதிர்மனுதாரர் பாலிஸி விதிகளை மீறியுள்ளார் என்றும் அதனால் 3ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனது வாகனத்தில் விபத்து சமயத்தில் எனது மனைவி பின்னால் உட்கார்ந்து வந்தார் என்றும் அவருக்கும் இந்த விபத்தில் அடிப்பட்டது என்றால் சரிதான். அவரும் இந்நீதிமன்றத்தில் MCOP 78/2024 என்ற மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

ஒம்/—மாரியப்பன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—ஆர்.சரவணபாபு
சார்பு நீதிபதி,
மேட்டூர்.

## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| MCOP.No. 77/2024 | Date : 27.03.2026 | PW 2 |
|---|---|---|
| Name: சரஸ்வதி | க/பெ. மாரியப்பன் | |

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது வயது, வருமானம், தொழில் ஆகியவற்றை காட்ட ஆதரவு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. விபத்தானது 28.04.2022 அன்று நடந்தது என்றால் சரிதான். மனுவானது 27.09.2024 யில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த மனுவானது காலதோஷத்தால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு எனது கணவர் காரணம் என்பதால் அவரது அஜாக்ரதையையும் நஷ்டஈட்டில் கணக்கில் கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல. மருத்துவ பில்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீட்டு தொகை அதிகம் என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்தியதாக கூறும் TN 52 V 861 என்ற டாடா ஏஸ் வாகனத்தின் ஓட்டுநருக்கு விபத்து காலத்தில் தகுந்த செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லாததால் வாகன உரிமையாளர் 1ம் எதிர்மனுதாரர் பாலிஸி விதிகளை மீறியுள்ளார் என்றும் அதனால் 3ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. மேலும் இந்த வாகனத்திற்கு பதிவு சான்றிதழ் காலாவதியாகிவிட்டதால் வாகன உரிமையாளர் 1ம் எதிர்மனுதாரர் பாலிஸி விதிகளை மீறியுள்ளார் என்றும் அதனால் 3ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் வாகனத்தில் நான் பின்னால் உட்கார்ந்து சென்றேன் என்றும் எனக்கும் இந்த விபத்தில் அடிப்பட்டது என்றால் சரிதான். நான் இந்நீதிமன்றத்தில் MCOP 78/2024 என்ற மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

ஓம்/—சரஸ்வதி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஓம்/—ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.